## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
## அசல் வழக்கு எண். 63/2021

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25–ம் நாள் வியாழக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 25.09.2025 | தகப்பனார் பெயர்: | பரமசிவம் |
| பெயர்: | சிங்காரவேலன் (PW–1 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | செம்பதனிருப்பு | சமயம்: | |
| தொழில்: | விவசாயம் | வயது : | 40/2025 |

**முதல் விசாரணை : 25.09.2025**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 09.10.2017 தேதியிட்ட எனது பெயரிலான கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகவும்

2. 13.11.2018 தேதியிட்ட தாவா 1 முதல் 4 வரையிலான சொத்துக்களின் பட்டா கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.2** ஆகவும்

3. 01.05.2019 தேதியிட்ட தாவா 5வது அயிட்ட சொத்தின் பட்டா கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.3** ஆகவும்

4. 05.04.2019 தாவா 5வது அயிட்ட சொத்தின் மின் இணைப்பிற்கான Consumer ledger **வா.சா.ஆ.4** ஆகவும்

5. 19.04.2021 தேதியிட்ட தாவா சொத்துக்களுக்கான சிட்டா அடங்கல் **வா.சா.ஆ.5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. **(பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டதால் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)**

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.